**கவனிக்க.-** *23.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1752 - 2012 මාර්තු මස 30 වැනි සිකුරාදා - 2012.03.30

*1752 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 76 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 77 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

**காணி பண்படுத்தற் சட்டத்தின் 19 ஆம் அத்தியாயத்தில் (4) ஆவது உபபிரிவின்கீழ் வழங்கப்பட்ட அளிப்பினை இரத்துச்செய்தல் (104) ஆம் அத்தியாயம் தொடர்பான அறிவித்தல்**

*ஊவா மாகாணத்தின் மொணறாகலை மாவட்டத்தின் சியம்பலாந்து பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் ஆகிய (மாகாணங்களுக்கு இடையிலான) கலுஆரச்சிலாகே பிரகீத் குலதிலக ஆகிய நான், காணி பண்படுத்தற் சட்டத்தின் 19(4) ஆவது உப அத்தியாயத்தின்கீழ் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களால், 1998.02.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மொ/அ 46590 ஆம் இலக்கம் கொண்ட அளிப்பினது உரிமையாளரான இல. 411, 6 ஆம் கிராமம், முத்துக்கண்டி எனும் வதிவிடத்தைக் கொண்ட தெபகம கங்கானம்லாகே உதானி சந்திரிக்கா என்பவருக்கு வழங்கி மொனராகல மாவட்ட பதிவு அலுவலகத்தின் எல்டிஓ/ஆர்51/86 ஆம் இலக்கத்தின்கீழ் 2007.08.15 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ்காட்டப்படும் அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற காணிக்காக பின் உரித்தாளியாக சட்டபூர்வமாக உரித்துடையவர் அல்லாதவிடத்து அல்லது உரித்துடையவர் இருந்தும் அவர் பின் உரிமை பெற விருப்பம் தெரிவிக்காதவிடத்து பின் உரித்தாளியாக நியமிப்பதற்கு ஒருவரும் இல்லையென அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் குறித்த அளிப்பானது குறித்த சட்டத்தின் 104 ஆவது அத்தியாயப்படி இரத்துச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

**அட்டவணை**

*மொணறாகலை நிர்வாக மாவட்டத்தின் சியம்பலாந்து பிரதேச செயலாளர் பிரிவின் மகவெதி றட்ட பற்று விஜிதபுர கிராம சேவகர் பிரிவினது 6 ஆம் கிராமத்தைக் கொண்ட கிராமத்தில் அமையப்பெற்றுள்ளதும் மொனராகல நிலஅளவை அதிகாரி பொறுப்பிலுள்ளதும் நிலஅளவையாளரால் வரையப்பட்ட 85 ஆம் இலக்கம் கொண்ட வெளிக்கள பத்திரத்தின் மூலம் வரையப்பட்ட ஆ. வ. படம் பீ.66 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்ட 4077 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும் 0.795 ஹெக். விஸ்தீரணத்தைக் கொண்டதுமான கீழே விபரிக்கப்பட்டவாறு எல்லைகளைக் கொண்ட அரச காணி :-*

*வடக்கு : இல. 4074 ஐக் கொண்ட காணி ;*
*கிழக்கு : இல. 4074, 4045 ஐக் கொண்ட காணி ;*
*தெற்கு : இல. 4045, 4079 ஐக் கொண்ட காணி ;*
*மேற்கு : இல. 4079, 4050 ஐக் கொண்ட காணி.*

*கே. பிரகீத் குலதிலக்க,*
*பிரதேச செயலாளர்,*
*சியம்பலாண்டுவ.*

*3-1006/1*

---

*இணைப்பு 9*

**காணி பண்படுத்தற் சட்டத்தின் 19 ஆம் அத்தியாயத்தில் (4) ஆவது உபபிரிவின்கீழ் வழங்கப்பட்ட அளிப்பினை இரத்துச்செய்தல் (104) ஆம் அத்தியாயம் தொடர்பான அறிவித்தல்**

*ஊவா மாகாணத்தின் மொணறாகலை மாவட்டத்தின் சியம்பலாந்து பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) கலுஆரச்சிலாகே பிரகீத் குலதிலக ஆகிய நான், காணி பண்படுத்தற் சட்டத்தின் 19(4) ஆவது உப அத்தியாயத்தின்கீழ் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களால், 1997.08.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மொ/அ 41305 ஆம் இலக்கம் கொண்ட அளிப்பினது உரிமையாளரான இல. 411, 6 ஆம் கிராமம், முத்துக்கண்டி எனும் வதிவிடத்தைக் கொண்ட தெவகம கங்கானம்கே உதானி சந்திரிக்கா என்பவருக்கு வழங்கி மொனராகல மாவட்ட பதிவு அலுவலகத்தின் எல்டிஓஆர்37/103 ஆம் இலக்கத்தின்கீழ் 1999.04.29 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ்க்காட்டப்படும் உப அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற காணிக்காக பின் உரித்தாளியாக சட்டபூர்வமாக உரித்துடையவர் அல்லாதவிடத்து அல்லது உரித்துடையவர் இருந்தும் அவன்/அவள் பின் உரிமை பெற விருப்பம் தெரிவிக்காதவிடத்து பின் உரித்தாளியாக நியமிப்பதற்கு ஒருவரும் இல்லையென அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் குறித்த அளிப்பானது குறித்த சட்டத்தின் 104 ஆவது அத்தியாயப்படி இரத்துச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

**அட்டவணை**

மொணறாகலை நிர்வாக மாவட்டத்தின் சியம்பலாந்துவ பிரதேச செயலாளர் பிரிவின் மகவெமதிறட்ட பற்று விஜிதபுர கிராம சேவகர் பிரிவினது 6 ஆம் கிராமத்தைக் கொண்ட கிராமத்தில் அமையப்பெற்றுள்ளதும் - பொறுப்பிலுள்ளதும் நிலஅளவையாளரால் வரையப்பட்ட வெளிக்கள பத்திரத்தின் மூலம் வரையப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும் 0ஏ. 0றூ. 3பே. விஸ்தீரணத்தைக் கொண்டதுமான கீழே விபரிக்கப்பட்டவாறு எல்லைகளைக் கொண்ட அரச காணி :-

வடக்கு : இல. 410ஏ, தொன்சன் உடைய மேட்டு காணி ;
கிழக்கு : ஆர். பிரேமதாச ஒதுக்கப்பட்ட பாதை ;
தெற்கு : இல. 429, ஜீ. எம். பியற்றிஸ் இன் காணி 412 எல்சீஆர் றூபசிங்கவின் மேட்டு நிலையம் ;
மேற்கு : கல் மலைக்கு ஒதுக்கிய காணி.

கே. பிரகீத் குலதிலக்க,
பிரதேச செயலாளர்,
சியம்பலாண்டுவ.

3-1006/2

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34204
மாகாண காணி ஆணையாளரின்
இல. : இ/6/வனாத/தீ.ப/2/3.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், வனாதவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டகண்டல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வட்டகண்டல் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி. பி. பு. 4231 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 1 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0278 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வங்கிச் சேவை நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு இலங்கை சமுர்த்தி அதிகார சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : மயிலகன காணி ;
கிழக்கு : வீதிக்கான ஒதுக்கு ;
தெற்கு : சமூக நிலையக் காணி ;
மேற்கு : சமூக நிலையக் காணி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2012.02.14 தொடக்கம்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2012 ஆம் வருடத்திற்கான வர்த்தகப் பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ;

தவணைப்பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வங்கிச் சேவை நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

பிரசாதி உபயசிரி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2012.

3-986

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/31383
மாகாண காணி ஆணையாளரின்
இல. : இகொ/06/களு/441.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம், பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 663ஏ, பண்டாரகம கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பண்டாரகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி. பி. க. 3356 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2 எனக் காட்டப் பட்டுள்ளதும் சுமார் 0.0506 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விண்ணப்பித் துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பி. பி. க. 3356 இல் காணித்துண்டு இல. 1 மற்றும் ஆரம்ப வரைபடம் ஏ5381 இல் காணித்துண்டு இலக்கம் 3 ;

கிழக்கு : ஆரம்ப வரைபடம் ஏ5381 இல் காணித்துண்டு இலக்கம் 3 மற்றும் பி. பி. க. 3356 இல் இலக்கம் 3 ;

தெற்கு : பி. பி. க. 3356 இல் இலக்கம் 3 மற்றும் பிரதேச சபை வீதி (க. 187 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 3) ;

மேற்கு : பிரதேச சபை வீதி (க. 187 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு இல. 3) மற்றும் பி. பி. க. 3356 இல் காணித்துண்டு இலக்கம் 1.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2012.02.06 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2012 ஆம் வருடத்திற்கான வர்த்தகப் பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ;

தவணைப்பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2012.03.06.

3-1054

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34364
மாகாண காணி ஆணையாளரின்
இல. : இகொ/6/களு/402.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம், ஹொரண பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 610ஏ, அரமனாகொல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அரமனாகொல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி. பி. க. 4004 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 6 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.6603 ஹெக்டேயர் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை சங்கத்தின் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஹொரண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை), இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கங்கள் 5 மற்றும் 3, டி. டபிள்யூ. பிரியந்த கித்சிரி என்பவர் உரிமை கோரும் எல்லகந்தவத்த (எச். பி. 64057) மற்றும் இந்த வரைபடத்தில் காணித்துண்டு இல. 4 ;

கிழக்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இல. 3, டி. டபிள்யூ. பிரியந்த கித்சிரி என்பவர் உரிமை கோரும் எல்லகந்தவத்த (எச். பி. 64057), இந்த வரைபடத்தில் காணித்துண்டு இல. 4 மற்றும் கொட்டகல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் எல்லகந்தவத்த (எச். பி. 64057) ;

தெற்கு : டி. டபிள்யூ. பிரியந்த கித்சிரி உரிமை கோரும் எல்லகந்தவத்த (எச். பி. 64057) இந்த வரைபடத்தின் காணித்துண்டு இல. 4, கொட்டகல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் எல்லகந்தவத்த (எச். பி. 64057) மற்றும் பி. பி. க. 3830 இன் காணித்துண்டு இல. 1 ;

மேற்கு : பி. பி. க. 3830 இல் காணித்துண்டு இல. 1 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை).

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2012.02.06 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2012 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் இரண்டு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2012.03.06.

3-1055